# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 62 / 2021 நாள்: 15.12.2021

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சாதாரணத் தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் இன்று (15.12.2021) பிற்பகல் காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றது.**

மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கு சாதாரணத் தேர்தலுக்கான அனைத்து முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில், மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இன்று (15.12.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், விரைவில் நடத்தப்பெற உத்தேசிக்கப்பட்டுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களுக்கான வாக்கு எண்ணுகை மையத்தினை உறுதி செய்தல், வாக்குப்பதிவு அலுவலர்கள் குறித்த விவரங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்த விவரங்கள், வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி இடம் தேர்வு செய்தல், தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/ உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல், வாக்குப்பதிவு பொருட்கள் இருப்பு குறித்த விவரங்கள், வட்டார/நுண் தேர்தல் பார்வையாளர்கள் நியமனம் குறித்த விவரங்கள் பேசப்பட்டது.

..2..

இதனைத் தொடர்ந்து, பதற்றமான வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவினை நேரலையாக கண்காணித்தல், நுண் மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்தல், அனைத்து வாக்குச்சாவடிகளில் சிசிடிவி கேமரா பொருத்துதல், பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்டறிதல் மற்றும் வாக்கு எண்ணுகை மையங்களை இறுதி செய்தல் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான கருத்துக்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

மேற்படி ஆய்வுக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திரு விசுமகாஜன், இ.ஆ.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு கி.அ. சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

15/12/2021

மக்கள் தொடர்பு அலுவலர்